திரு. எஸ். இராசாராமன் : தலைவர் அவர்களே, வரலாறு படித்தவர்களுக்கு இப்போது புதிதாகப் படித்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறது, அதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு படித்தவர்கள் உயர்நிலைப்பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்கள் பலபேர் அதிலே பட்டம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் புரொமோஷன் என்கிற முறையில் வருகிற காரணத்தால் வெளியே தனியாகக் கல்லூரிகளில் படித்து பட்டம் பெற்றவர்களுக்குப் போதுமான வேலை கிடைக்காமல் இருக்கிறது. இது வரலாறு படித்தவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ் படித்தவர்களுக்கும் இந்தப் பாதகமான நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதை ஓரளவிற்குத் தீர்ப்பதற்கு அரசு சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பாளையங்கோட்டையிலுள்ள நீதிமன்றங்களுக்கான கட்டிடங்கள் கட்டும் திட்டம்.

*வினா எண் 29—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையிலுள்ள உரிமையியல் நீதிமன்றத்திற்கும், குற்றவியல் நீதி மன்றத்திற்கும் தனித்தனி கட்டிடங்கள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

(இ) மதிப்பீடு எவ்வளவு?

(ஈ) எந்த இடத்தில் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இ மற்றும் (ஈ) திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரி ஹைகிரவண்ட்ஸ் மனை வளாகத்தில் ரூ. 54,00,000 மதிப்பீட்டுச் செலவில் சிவில் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்குத்தனித்தனியாகக் கட்டிடம் கட்டுவதற்கான உள் துறை ஆணை 582 எண்ணும் 16-3-81 நாளிட்ட அரசாணையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடங்கள் எவ்வளவு காலத்தில் கட்டி முடிக்கப் பெறும்? இவைகளில் வழக்குரைஞர்களுக்கென்று தனியாக சேம்பர் கட்டித் தருகிற உத்தேசம் இருக்கிறதா?

1982 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிட வேலை துவக்கப்பட்டு விட்டது. மிக விரைவில் முடித்து விட வேண்டுமென்று அரசு உத்தர விட்டுள்ளது. வழக்குரைஞர்களுக்குத் தனியாக ஒரு கட்டிடம் கட்டுவதற்கு அரசு தனியாக அதைப் பரிசீலிக்கும்.

சிமென்ட் ஆலைகளில் நடத்தப்பட்ட சோதனை.

*வினா எண் 30—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாநிலத் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் 14–10–1981 அன்று தமிழகத்திலுள்ள சிமெண்ட் ஆலைகளில் சிமெண்ட் மூட்டைகளின் எடை அளவுச் சோதனை நடத்தினார் களா?

(ஆ) ஆம் எனில், சோதனையில் என்னென்ன தவறுகள் எந்தெந்த தொழிற்சாலைகளில் கண்டுபிடிக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) சோதனையில் சிமெண்ட் மூட்டைகளில் எடை குறைவு கீழ்க்கண்ட தொழிற்சாலைகளில் கண்டு பிடிக்கப்பட்டது :—

(1) செட்டி நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், கரூர்,

(2) தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், அரியலூர்.

(3) மெட்ராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட், துலுக்கப்பட்டி.

(4) அசோசியேடெட் சிமெண்ட் கம்பெனி லிமிடெட், மதுக்கரை.

(5) இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், திருநெல்வேலி மற்றும்

(6) டால்மியா சிமெண்ட்ஸ் லிமிடெட், டால்மியாபுரம்.

திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமென்ட் மூட்டைகளின் எடை குறைவை மாநில அதிகாரிகள் ஆலைகளில் கண்டுபிடித்தாலும் அல்லது தனிப்பட்ட டீலர்களிடம் கண்டுபிடித்தாலும் அவர்கள் சிமென்ட் சணல் பைகளில் கட்டப் படுவதால் இதுபோன்று எடை குறைவு ஏற்பட்டு விடுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, உரிய